**நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான எனது உறுதிமொழி (சத்தியப்பிரமாணம்)**

இறைமையுள்ள தமிழீழத் தனியரசை வென்றெடுக்கும் வகையில் புலம்பெயர் தமிழீழ மக்களால் உருவாக்கப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான மக்கள் பிரதிநிதியாக ஜனநாயக ரீதியில் தெரிவாகியிருக்கும் நான்,

தற்போது சிறிலங்கா அரசினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது தமிழீழத் தாயகத்தை விடுதலை பெறச் செய்து, ஐக்கிய நாடுகள் சபையில் இன்று அங்கம் வகிக்கும் ஏனைய தேசிய அரசுகளைப் போல பூரண சுதந்திரமும் இறைமையும் கொண்ட தேசிய அரசாக தமிழீழத்தைப் பரிணமிக்கச் செய்வதற்கான தாயக மக்களின் ஜனநாயக ஆணையையும்இ இதற்காக ஆகுதியாகிய ஆயிரக்கணக்கான விடுதலை வீரர்களினதும்இ மக்களதும் அளப்பரிய அர்ப்பணிப்புக்களையும் மனதில் இருத்தி,

எமது தாயகத்தில் நடைபெற்ற, தொடர்ந்தும் நடைபெறுகின்ற, தமிழின அழிப்பின் நீண்ட வரலாற்றின் தார்ப்பரியத்தை சர்வதேச உலகுக்கு உணர்த்தி,

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கும் என்னைத் தெரிவு செய்த எமது மக்களுக்கும் உண்மையாகவும், விசுவாசமாகவும் ஆக்கபூர்வமான முறையிலான செயற்பாடுகளில் பங்கேற்று, எந்தச் சக்திகளும் எமது குறிக்கோளைத் திசைதிருப்பி, உள்ளக சுயநிர்ணயம் என்றோ அல்லது சிறிலங்கா அரசின் அரசியலமைப்புக்குள்ளோ குறுகச்செய்து எமது மக்களின் ஜனநாயக ஆணையை மறுதலிக்கும் வேறு வடிவங்களுக்குட்படுத்தும் அழுத்தங்களுக்குப் பலியாகாது,

சர்வதேச ரீதியிலான அனைத்துச் சக்திகளும் எமது இலக்கின் தார்மீகத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் எமது இலக்கிற்கேற்ற இராஜதந்திரத்துடன் செயற்பட்டு, அதற்கேற்ற வகையில் தாயகத்துடனும் உலகின் அனைத்துப் பாகங்களிலும் இருக்கும் தமிழ்த் தேசியச் சக்திகளுடனும் நட்பைப் பேணி, எந்தவித பதவியையோ, அதிகாரத்தையோ எதிர்பார்க்கும் மனநிலைக்கு உட்படாது, இரண்டாம் தலைமுறையை முன்னிலைப்படுத்தி, முதலாம் தலைமுறையின் பல்வகைப் பலத்தையும் அதன்பின் அணிதிரட்டி தேச எல்லைகள் தாண்டிய எமது பரவுகையின் பலத்தை அடித்தளமாக வைத்துச் செயற்படுவேன் என்று இத்தால் எமது தேசியத் தலைவரின் இலட்சிய உறுதியின்மேல் ஆணையிட்டு தமிழ் மக்களாகிய உங்கள் முன்னால் உறுதிமொழி செய்கின்றேன்.

தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம் !

.......................................................................................................

(திரு, திருமதி .....................................................)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான அரசவை உறுப்பினர் நாடு : ......................................................